[1983 பிப்ரவரி 11

சென்னை பட்டினப்பாக்கத்திலுள்ள அரசு அலுவலர் குடியிருப்புகள்,

* வினா எண் 232—திரு. மு. அப்பாதுரை ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கிழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்புகளில் கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் எப்போதும் சாலைகளில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அக்குழாய்களை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கழிவு நீர்க் குழாய்கள் தற்போது மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இந்த பதிலை அளிப்பார் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே தான் இந்தக் கேள்வி இன்றைக்கு வரும் என்று தெரிந்து அந்தப் பகுதியை நேற்றுப் பார்வையிட்டேன். இன்றைக்கும் அங்கே தெருவில் சாக்கடை ஓடிக் கொண்டு தான் இருக்கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் இன்றைக்காவது அங்கே சென்று பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தக் குறையை நீக்குவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள குறிப்பை நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு இன்றைய தினம் சென்று பார்வையிட்டு, அப்படித்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார். அந்தத் தொகுதியிலேதான் நானும் வசிக்கிறேன். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரோடு கலந்து பேசி நிச்சயமாக ஆவன செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை • தலைவர் அவர்களே., அந்தத் தெருவிலே இருக்கக்கூடிய குழாய்களில் இருந்து கழிவு நீர் கசிந்து கொண்டு இருக்கிறது. வீடுகளிலும், மாடிகளிலும் உள்ள குழாய்களில் இருந்து இந்த கழிவு நீர் கசிகிறது. இவைகளை மாற்ற சிமெண்ட் குழாய்கள் போடப்படுகின்றன. அவைகளை மாற்றி உறுதியான குழாய்களை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எந்த குழாய் உறுதியானது என்று இன்ஜினியர்களைக் கலந்ன ஆவன செய்யப்படும்.